Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் சுபோதி சித்திரை 6 ஆம் நாள் துலஹஜ் 5 (18-4-64) சனிக்கிழமை இதழ் 67

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	1-00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

யாழ்ப்பாணம்

மக்கள்வங்கி கிளையில் சிங்களத்தில் அலுவல்?

அடுத்த வருடம் முதல் அமுலாகும்

யாழ்ப்பாணம், சனி

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை அடுத்த வருடம் முதல் சிங்கள மயமாக்கப்படுமென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக் கிணங்க, 1965-ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் மக்கள் வங்கி கிளையில் வேலைகள் யாவும் சிங்களத்திலேயே நடைபெறும்.

இது சம்பந்தமாக மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கைக் கிணங்கவே தாங்களும் கடமையாற்ற வேண்டியிருக்கிறதென்றும் ஆனால் பொது மக்கள் எந்த மொழியில் தொடர்பு கொள்கின்றனரோ அந்த மொழியில் தாங்கள் தொடர்புகொள்வோம் என்றும் கூறினார்.

இருந்த பொழுதிலும், இக் கிளையில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்கள் சிங்களத்தில் கட்டாயம் தேர்ச்சியடைந்திருக்கவேண்டும் எனத் தெரியவருகிறது. அதனால் மட்டுமின்றி மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்துடனான கடிதத் தொடர்புகளும் உத்தியோக மொழியான சிங்களத்திலேயே நடைபெறும்.

யாழ்ப்பாண மக்கள் வங்கிக் கிளையில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு ஓரிரு வாரங்களில் சிங்களப் பரீட்சைகள் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

யாழ். புதிய தபாற்கந்தோர் எப்போது திறக்கப்படும்?

2 அறைகள்மட்டும் நேற்று திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தின் புதிய பெரிய தபாற்கந்தோர் கட்டிடத்திலுள்ள தந்தி உபகரண அறையையும் டெலிபோன் எக்ஸேஞ்சு அறையையும் யாழ்ப்பாணம் பிரதம போஸ்ட் மாஸ்டர் திரு. எஸ். முத்துக்குமாரு நேற்றுக் காலை திறந்து வைத்தார். முனியப்பர் கோவிலிலிருந்து இலட்சுமி தேவியின் படம் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு, தேவிக்குப் பால் காய்ச்சியபின்னர் இரு அறைகளும் திறந்துவைக்கப்பட்டன.

புதிய தபாற்கந்தோரில் இவ்விரு அறைகளும் திறந்துவைக்கப்பட்டபொழுதிலும் பொது மக்கள் தந்திகொடுப்பதற்கும் டெலிபோன் பேசுவதற்கும் பழைய தபாற்கந்தோருக்கே செல்லவேண்டும். புதிய தபாற்கந்தோர் பரிபூரணமாகத் திறக்கப்பட்டபின்னரே பொது மக்கள் இதனால் நன்மையடையலாம்! ஆனால் தபாற்கந்தோர் பொதுமக்கள் பாவனைக்கு எப்பொழுது விடப்படும் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

ஐந்து லட்சரூபா செலவில் கட்டப்பட்டு, கட்டிடம் பூர்த்தியாகி மாதங்கள் சுமார் மூன்றாகியும் புதிய தபாற்கந்தோர் இன்னும் திறக்கப்படாமலிருப்பது பொதுமக்களுக்குப் பெரும் சிரமத்தைக் கொடுப்பதாகவே இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் தேசிய தின விழா

யாழ்ப்பாணம், சனி

புதுவருட தினதின யொட்டி இன்று யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் தேசியதினக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழா யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக நடைபெறவிருக்கும் தேசியதின விழாவாகும்.

காவடி, நடனம், நாடகம், நாட்டுப்பாடல், சீனடி சிலம்படி, கரகம், கயிறிழுத்தல் போன்ற தேசிய நிகழ்ச்சிகளும் லைப்பந்தாட்டப் போட்டி, விஞ்ஞை உடைப் போட்டி, நீச்சல்போட்டி ஆகிய விசேஷ நிகழ்ச்சிகளும் இத்தேசியதின விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாக இருக்கும். காலை எட்டு மணிக்கு குருநகர் கடற்கரையில் நீச்சல்போட்டி நடைபெறும். பின்னர் மாலை 4 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை மற்றைய நிகழ்ச்சிகள் நடைபெறும். நீதியரசர் திரு. எச். டபிள்யு. தம்பையா, செனட்டர் எஸ். நடேசன் ஆகியோர் விழாவில் சொற்பொழிவாற்றுவார்கள். கடைசி நிகழ்ச்சியாக கலியரச சொர்ணலிங்கம் குழுவினரின் "அவளின் வேதனை" என்னும் நாடகம் இடம்பெறும்.

பூதானத்துக்கு 13-வது ஆண்டு நிறைவு

புதுடில்லி, ஏப். 17

பூதான இயக்கத்தின் 13-வது ஆண்டு நிறைவு நேற்றையதினமாகும். இதுவரை ஆச்சார்யா வினோபாஜியிடம் 45 லட்சம் ஏக்கர் நிலமும், 6500 கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டிருக்கின்றன. 12 லட்சம் ஏக்கர் நிலமற்றவர்களுக்கு இதுவரை விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

குருஷ்சேவுக்கு பிரதமர் வாழ்த்து

கொழும்பு, வெள்ளி

சோவியத் பிரதமர் குருஷ்சேவின் 70-வது பிறந்த தினத்தை முன்னிட்டு, அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை இலங்கைப் பிரதமர் அனுப்பியிருக்கிறார்.

இன்று

யாழ்ப்பாணம், சனி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய மணவாளக் கோல உற்சவம். பகல் 10மணி முதல் சங்காபிஷேகம். மாலை 6 மணிக்கு ஸ்ரீ வி. எஸ். எஸ். மணிபாகவதர் மீனாட்சி கல்யாணம் எனும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்வார். இரவு 7-30-க்கு புஷ்பப்பல்லக்கில் சுவாமி திருவீதிவலம் வருதல்.

இந்திய ஹைகமிஷனர்

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் தற்பொழுதுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் விரைவில் தாயகம் திரும்பலாமென்றும் இலங்கையின் புதிய இந்திய ஹைகமிஷனராக தற்பொழுது பாகிஸ்தானில் இந்திய ஹைகமிஷனராகவிருக்கும் திரு. ஜி. பார்த்தசாரதி நியமிக்கப்படலாமென்றும் கம்பப்படுகிறது.

திரு. ஜி. பார்த்தசாரதி முன்னர், சீனாவில் இந்திய ஹைகமிஷனராக விருந்தார்.

கூட்டு அரசாங்கம் கெனமன் உறுதி

கம்யூனிஸ்ட் கட்சி 7வது மகாநாட்டில் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

"இடதுசாரி முன்னணியின் ஒப்பந்தத்தில் காணப்படும் கொள்கைகளை அமுல் நடத்துவதும், இடதுசாரி முன்னணி முக்கிய பங்கு கொள்ளக் கூடியதுமான, முற்போக்கு சக்திகளின் அரசாங்கம் ஒன்று அமைவது கட்டாயமானதும், நிச்சயம் நிகழக்கூடியதுமாகும்" என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. பீட்டர் கெனமன் கட்சியின் ஏழாவது காங்கிரஸ் மகாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட்கட்சியின் 7 வது காங்கிரஸ் மகாநாடு நேற்று கட்சித் தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பமாயிற்று. மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளை தலைவர் டாக்டர் எஸ். ஏ விக்கிரமசிங்கா வரவேற்றுப் பேசினார். மகாநாட்டையும் அவரே திறந்துவைத்தார். மகாநாட்டுத் தலைமையாளர்களாக திருவாளர்கள் விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன், ஜி. மெண்டிஸ், சரணங்கர தேரோ, ஐ. ஆர். அரியரத்தினம், பி. யசோடிஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. விக்கிரமசிங்கா பேசுகையில் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமையில் இந்த மகாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததெனத் தெரிவித்தார். ஆறாவது காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி இடதுசாரி முன்னணி உருவாக்கப்பட்டுவிடப்பட்டதாகவும் அதை இனி ஸ்திரப்படுத்தி பலம் அளிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

திரு. பீட்டர் கெனமன் மேலும் தெரிவித்ததாவது:—

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இடதுசாரி முன்னணியின் ஒத்துழைப்புத் தேவையென்பதை சிறி லங்கா சுதந்திரக்கட்சியினர் உணர்ந்துகொண்டது நல்ல அறிகுறியாகும். தற்போதைய நிலைமை யு. என். பி.க்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஆச்சரியத்தையும் வேதனையையும் கொடுத்துள்ளது. இதனால் இவர்கள் இடதுசாரிகளான சண்முகதாசன் போன்ற நாசகாரிகளின் உதவியை நாடுகின்றனர். இடதுசாரியினருக்கும் சுதந்திரக் கட்சியின் இடதுசாரிக் குழுவினருக்குமிடையில் ஒற்றுமை ஏற்படுவதென்பது புதியதல்ல. நாம் எதிர்பார்த்தது நடைபெற ஆரம்பமாகும் போது ஆச்சரியப்படுவதற்கில்லை. இரு சாராரும் கூட்டுச்சேருகையில் பொதுவான அடிப்படைக் கொள்கையில் சேரவேண்டியது அவசியம்.

இப்போதைய அரசியல் சூழ்நிலையைத் தீர்க்கும் பிரச்சினை இடதுசாரி முன்னணியில் மட்டுமே தங்கியிருக்கிறது. சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் நடுவழிப்பாதைக் கொள்கையே தற்போதைய அரசியல் நெருக்கடிக்குக் காரணம். இக்நெருக்கடியை மேலும் நீடித்திருக்க விடமுடியாது.

முந்திரிகைச் செய்கைக்கு நிலம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்தில் முந்திரிகைச் செய்கைக்கான காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இம்மாதம் 20-ம் திகதி அனுப்பிவைக்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்திற்கான பாரங்கள் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாமென்றும் கட்சிப் பிரமுகர் ஒருவர் அறிவித்துள்ளார்.

7 போர் கப்பல் வழங்கப்பட்டது

ஜாகர்த்தா, ஏப். 17

இந்தோனேஷிய கடற்படைக்கு 7 போர்க்கப்பல்களை ரஷ்யா வழங்கியிருக்கிறது.

நல்லூர் கி. ச. தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், சனி

நேற்று நடைபெற்ற நல்லூர் கிராமசபைத் தேர்தல் முடிவுகளின் விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்: கே. துரைராசா.

2-ம் வட்டாரம்: பி. கவரத்தினசிங்கம்.

3-ம் வட்டாரம்: கே. இளையதம்பி.

4-ம் வட்டாரம்: சே. துரைசிங்கம். (6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

பிறரால் உண்மையாகத் துன்பப்பட்டவர்கள் அவர்களை மன்னிக்கவோ, அல்லது அவர்களது உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ளவோ முடியும். நாம் நசய்வது சரியா என்பது மெக்கே தெரியாத நிலையில்' நம்மைப்போல் பிறரையும் மன்னிப்பது அவசியமாகின்றது.

— லாரன்ஸ வாண்டர்போஸட்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 6 (18-4-64)

பொலிஸார் – பொதுமக்கள் நல்லுறவு

தேசியதின விழா இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் பொலிஸார் முக்கிய பங்குகொள்ளும் இந்த விழா பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் நெருங்கிய ஒத்துழைப்பையும் நல்லுறவையும் ஏற்படுத்துமென நம்பலாம். துரதிர்ஷ்டவசமாக சமீப அரசியல்சூழ்நிலை காரணமாகப் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் விரும்பத்தக்க உறவு நிலவவில்லை. இந்த நிலையை மாற்றி நல்லுறவையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த வாய்ப்பளிக்கக்கூடிய தேசிய விழாவை ஒழுங்குசெய்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

பொலிஸார் பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டியவர்கள். நாட்டில், சமூகத்தில் குற்றச்செயல்கள் நடைபெறாமல் கவனிக்கவேண்டியதும், மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியதும் பொலிஸாரின் கடமை. அவர்கள் தமது கடமையை வெறும் தொழிலாகக் கருதாமல் சேவையாகக் கருதிச் செய்யவேண்டியவர்கள். அந்நியரின் ஆட்சியின்போது மக்களை அடக்கி ஒடுக்கிவைப்பது பொலிஸாரின் வேலையாக இருந்தது. ஆனால் இப்பொழுதுள்ள நிலைமை வேறு. என்றாலும் பொலிஸார் என்றால் மக்கள் பீதியடைய வேண்டுமென்ற பழைய மனப்பான்மை சில பொலிஸாரிடம் இன்னும இருந்துவருகிறதென்பதைச் சமீபத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் காட்டுகின்றன. அரசியல் சூழ்நிலைகளும் இத்தகைய செயல்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் காரணமாக இருந்துவிடுகிறது. இது வருந்தத்தக்கது. அரசியல் நிலைமை எப்படியிருப்பினும் எவ்வித பாகுபாடுமின்றி நாட்டு மக்களுக்குச் சேவைசெய்யவேண்டியது பொலிஸாரின் பொறுப்பு.

பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் பொதுமக்களின் குறைகுற்றங்களைத் தெரிந்து தமது கடமையைச் சரிவரச் செய்வதற்கும் பொலிஸார் எந்தப் பகுதியிலிருப்பினும் அப்பகுதி மக்களின் மொழி தெரிந்திருக்கவேண்டியது அவசியம். மக்களின் மொழி தெரியாடிவில் தமது கடமையைச் சரிவரச் செய்ய முடியாததுடன் நீதிகிடைப்பதும் கஷ்டமாகிவிடும். தமிழ் மொழி தெரியாத பொலிஸார் யாழ்ப்பாணம் போன்ற தமிழ் பேசும் பகுதிகளில் நியமிக்கப்பட்டதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் பல சங்கடங்கள் நேர்ந்தன. இப்பொழுது தமிழ் தெரிந்த பொலிஸார் பலர் நியமிக்கப்படவிருக்கின்றனர். இது நிலைமையை மேலும் சீராக்கும்.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் நல்லுறவும் ஒத்துழைப்புமிருந்தால்தான் நாட்டில் குற்றச் செயல்கள் குறையும். குற்றச் செயல்கள் குறையவும் நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவவும் இன்று முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தேசிய விழா வழிவகுக்கவேண்டும். இதுபோன்ற விழா வடமாகாணத்தின் இதர பகுதிகளில் நடைபெறுவதற்கு இன்றைய விழா வழிகாட்டுமென்றும் எல்லோருடைய ஆதரவுடனும் வருடாவருடம் இவ்விழா நடைபெறுமென்றும் வடபகுதி பொலிஸ் சுப்ரின்டென்டன்ட் திரு. வான்சாள்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவரது நம்பிக்கை வீண்போகாதென்றும் பொலிசார்-பொதுமக்கள் உறவு பலமடைந்து நாட்டில் அமைதி நிலவுமென்றும் எதிர்பார்ப்போமாக.

தமிழ் கலைக்களஞ்சியம் அளித்த திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

— வை. முத்துக்குமாரசுவாமி —

18-4-1856-ம் ஆண்டில் பிறந்த திரு. முத்துத்தம்பிப்பிள்ளையின் 106-வது பிறந்த தினத்தையொட்டி அன்னாரை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஆங்கிலேயர் தமது சிறந்த புலவர்களின் பிறந்தநாட்களைக் கொண்டாடுவது வழக்கம், உவில்லியம் ஷேக்ஸ்பிய (சகப்பிரியர்)ரின் 400-வது பிறந்த நாளை 23-4-64 அன்று கொண்டாட உலகமக்கள் இருக்கிறார்கள். மிகச்சிறந்த பெரியார்களின் ஜெயந்தியையும் மறைவையும் தமிழ்நாட்டில் கொண்டாடப்படுவது சிறந்தது.

ஈழநாட்டிலே மிகச் சிறந்த புலவர்களில் பத்துப்பேர்களை எடுத்தால் அவர்களை நாவலர் பெருமான், சி. வை. தாமோதரம்பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, உவைமன் கதிரைவேற்பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, அ. குமாரசுவாமிப்புலவர், தி. த. கனகசுந்தரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், விபுலானந்தஅடிகள்என நாம் வரிசைப்படுத்தலாம்.

நாவலர்ஐயாவின் பெரிய புராணம் அவரை அமரர் ஆக்குகின்றது. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பழைய ஏடுகளைப் பதிப்பித்திருக்காவிடில் தொல்காப்பியம் முதலாய சங்கநூல்கள் நமக்கேது? அகராதித்துறையில் உழைத்த சீலர்கள் நா.கதிரைவேற்பிள்ளை, உவைமன் கதிரைவேற்பிள்ளை அ.குமாரசுவாமிப் புலவர், சுவாமி ஞானப்பிரகாசர் முதலியோர். அகராதித்துறையில் ஈழநாட்டுப் பெருமக்கள் மேனாட்டு முறையில் தமிழ் அகராதிகள் பல உருப்படுத்தினர்.

யாழ்ப்பாணத்திலே வெளியிடப்பட்ட முதல் அகராதி மானிப்பாய் அகராதி எனப்பட்டது. அதன்பின் வெளிவந்த முக்கிய அகராதி அபிதான கோசம்.

பிள்ளை அவர்கள் செய்த முக்கிய நூல்கள்

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் 1902-ல் "அபிதான கோசம்" என்னும் பல்கலைப் பொருள் அகராதியினை தமது யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் இருந்து வெளியிட்டார். தமிழில் வெளிவந்த கலைக்களஞ்சியங்கள் எல்லாவற்றிற்கும் இது முன்னோடியாக இருந்தது. இது மீண்டும் அச்சிடப்பட வேண்டிய முக்கிய நூல். 7-11-1907-ல் பிள்ளையவர்கள் ஆங்கில-ஆங்கில-தமிழ் அகராதியினை நாவலர் அச்சுக்கூடத்தினின்று வெளியிட்டார். அது மிகவும் சிறந்த அகராதி. (அது இன்றும் பெறக்கூடியதாக இருக்கின்றது.) இது கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்களுக்குச் சமர்ப்பித்துப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

பிள்ளை அவர்கள் அகராதித் துறையில் எழுதிய "தமிழ்-தமிழ்-அகாராதி" அச்சுவாகனம் ஏறவில்லை. இது அச்சிட்டால் இன்று இத்துறையில் உள்ள அகராதிகளிலும் சிறப்பாக அமையும் என்பது எமது கருத்து.

பிள்ளை அவர்கள் எழுதிய நூல்களுள் பாரதச் சுருக்கம் மிகவும் சிறந்தது. இதனைபால நந்தம் ஐமிந்தாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை (5-வது) தாபித்த ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்களின் தொண்டுக்காக அர்ப்பணஞ் செய்யப்பட்டது. பிள்ளை அவர்கள் இந்நூலின் முகவுரையில் கூறுகிறார்:

நம் முன்னோர் ஈட்டிவைத்துப்போன கலாநிதிகளுள்ளே வேதமே முதன்மையுடையது. மகாபாரதம் அதற்கு அடுத்தபடியிலுள்ளது...அந்து ஐந்தாம் வேதமென உச்சி மேற்கொண்டு மெச்சப்படுவதாயிற்று ... மகாபாரதத்திற்கிணையான வனப்பும் பெருமையுமுடைய நூல் உலகில் மற்றெத் தேசத்தும் எம்மக்களிடத்தும் இல்லையென்பதும் எதனையும் எளிதில் அங்கீகரியா இயல்புடையவராகிய ஐரோப்பிய பண்டிதர்க்கும் ஒத்த துணிபாம்."

'வேதம் ஞானமும்ஒழுக்கமும் விதிப்பது, மகாபாரதமோ அவ்விரண்டினையும் சரித்திர மூலமாக எடுத்து வலியுறுத்துவது...பாரதம் நம்மவர் இருபாலாரும் இருவரும் ஓதத்தக்க நூலேயாம். பாரதம் பலகாற்பயின்ற பண்டித சிரோன்மணிகளையும் தன்கட் கூறப்படும் சரித்திரத்தைக் கிரகித்து முறைப்படவெடுத்துரைக்க வொட்டாப் பெரும் பரப்பும் சாகோபசாகங்களு முடையதாதலின், யாவர்க்கும் எளிதிற் பயன்படுமாறு அதனைச் சுருக்கிச் செந்தமிழ் வசனத்தாற் செய்தனர்.

இதன் சிறப்பை உணர்ந்த இலங்கைக் கல்விப் பகுதியார் இதை பொதுத் தராதரப் பரீட்சை (ஜி. ஸி. ஈ.) பாடப் புத்தகமாக (1965-1967) தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

'ஈழமண்டலப் புலவர்', "ஈழமும் தமிழ்ச் சங்கமும்" முதலிய இவர் எழுதிய சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் செந்தமிழ் (1901-1917) என்னும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சஞ்சிகையில் காணப்படுகின்றன. இவர் எழுதிய தென்மொழி வரலாறு 1921-ல் வெளியிடப்பட்டது.

விஞ்ஞானத்தை தமிழிலே புகுத்தவேண்டுமென்னும் கொள்கையால், 1897-ல் பிள்ளை அவர்கள் "வைத்திய விசாரணி" என்னும் மாதாந்த சஞ்சிகையினை வெளியிட்டார். அதில் ஆங்கில வைத்தியப் பதங்களுக்குத் தமிழிலே பதங்களைக் காணலாம்.

சென்னைப் பேரகராதிக்கு (மதராஸ் தமிழ் லெக்சிகனுக்கு) சொற்கள் பலவற்றைச் சேகரித்து அனுப்பிய ஈழத் தமிழ் அறிஞர்களுள் இவரும் ஒருவர். இவருடைய சேவையைப் பற்றி அந்த நூலின் முகவுரையில் குறிக்கப்பட்டிருக்கிறது. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சகருள் இலக்கிய இலக்கணப் பரீட்சகர் ஒருவராகப் பிள்ளை அவர்கள் பல்லாண்டுகளாகத் திகழ்ந்தார்.

அவருடைய இலகுபோத பாலபாடங்களில் (1-8) பல விஞ்ஞானக் கருத்துக்கள் உடையன. சிறப்பாக அவருடைய 6-ம் பாலபாடம், சைவசமய பாலபோதம், கந்தரலங்காரம் புத்துரை, திருவாசகம் (சிறந்த முகவுரையுடன்) பிள்ளை அவர்கள் வெளியிட்டார். சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ண மந்திரம், நான்கு மணித்தியாலத்தில் அமெரிக்கா போய்த் திரும்பி வந்த அற்புத யோகியின் வரலாறு, இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடகளுள் ஒருவராகிய அன்னி பெசன்ற் அம்மையாரின் "நான் ஏன் தத்துவ சமாஜத்தைச் சேர்ந்தேன்" என்னும் நூல்களை வெளியிட்டார். சுவாமி விவேகானந்தர் இலங்கையில் செய்த பிரசங்கங்களைத் தமிழில் அக்காலத்தில் இவர் வெளியிட்டார்.

கைலாயமாலையை ஆங்கிலத்தில் வெளியிட்டார். 'பிரபோத சந்திரோதயம்' என்னும் வடமொழித் தத்துவ நாடகத்தை தமிழில் மொழி பெயர்த்தார். காளிதாச சரித்திரத்தை வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்து 1885-ல் வெளியிட்டார்.

சூடாமணி நிகண்டு, நன்னூல் இலகுபோதம், இலகுபோத இலக்கணம் போன்ற இலக்கணநூல்களை வெளியிட்டார்.

இவர் சரித்திரத்துறையில் மிகச் சிறப்பாகத்தொண்டாற்றி இருக்கின்றனர். 1883ல் இலங்கைச் சரித்திர சூசனத்தை வெளியிட்டார். இது ரெனென்ற் எழுதிய இலங்கை வரலாற்றின் சூசனம்.

இவர் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் மிகவும் முக்கிய ஆதாரமுள்ள தேசிய நூல். பழைய கர்ணபரம்பரைகள், சனசமூக வாழ்க்கை, பெரியார் வரலாறுகள் பல கொண்டது. இது ஈழத் தமிழ் நாட்டு வரலாற்றைப்பற்றி எழுதுவாருக்கு ஒரு அத்திவாரக் கட்டடம். இது 1912ல் எழுதப்பட்டது. அக்காலத்தில் தேசிய கண்களுடன் எழுதப்பட்ட நூல் கிடையாது. யாழ்ப்பாண வெளபவ கௌமுதி, யாழ்ப்பாண வைபவ விமர்சனம், யாழ்ப்பாணச் சரித்திரம் (முதலியார் இராசநாயகம்) இவையாவும் இந்த அத்திவாரக் கட்டடத்தின்மீது எழுதப்பட்ட இராசகோபுரங்கள் ஆவன. பிள்ளை அவர்களின் யாழ்ப்பாணச் சரித்திர முகவுரையில் அவர் யாழ்ப்பாணத்தைப்பற்றிய வரலாறு அமைக்க எவ்வளவு சிரமம் எடுத்தார் என்பது புலனாகும். இன்றைய இளைஞர்கள் அதனை வாசித்துப் பல குற்றங்கள் கண்டுபிடிக்கலாம். ஆயினும் அது புற நாட்டவராலும், புற சமயத்தாராலும் நம் நாட்டு வரலாற்றைத் திரித்தும், குறைத்தும் 'துவேஷக் கண்களால்' பார்க்கப்பட்டு வரையப்பட்ட வரலாறு அல்ல. இது 'யாழ்ப்பாண வைபவமாலை', 'வையாபாடல்', 'கைலாயமாலை' முதலிய சரித்திர மூலாதார நூல்களின் ஆதாரபலத்துடன் எழுதப்பட்டது. இது அச்சிடப்படுதல் அவசியம். ஏனெனில் ஈழநாட்டுத் தமிழர் வரலாற்றை அறிவதற்கு இது முக்கியமான நூல்.

ஆகவே சரித்திரம், இலக்கியம், அகராதி முதலிய துறைகளில் தமிழில்சிறந்த பணிசெய்த ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் பெரிய புகைப்படம்ஒன்றினை யாழ்ப்பாணம் நூல் நிலையத்தில் திரைநீக்கம் செய்து வைத்தல் தமிழை வளர்க்கும் பெரியார்களதும், சங்கங்களினதும் கடமையாகும். விபுலானந்தஅடிகளுக்கு மட்டக்களப்பு மக்கள் ஒரு சிலை அமைத்துள்ளார்கள். நாவலர் பெருமானுக்கு ஒரு சிலை அமைக்க இருக்கின்றனர். தமிழ் மொழிக்கே முதல் கலைஞ்சியமாகிய அபிதானகோசத்தை அளித்த யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்து ஆறுமுகம் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் ஞாபகமாக ஒரு சிறப்பு மலரைப் பிரசுரஞ்செய்தல் தமிழ்ப் பெருமக்கள் செய்யும் சிறந்த பணிகளில் ஒன்றாகும். அப் பணியைச் செய்யத் தமிழறிஞர்களும் பெரியோர்களும் ஆதரவளிப்பாராக!

ஐயாறன் எழுதுவது

நேற்று 17-ம் திகதி நமது பிரதமர் ஸ்ரீமாவுக்கு 48-வது பிறந்ததினம். அதே நாளில் தான் ரஷ்யப்பிரதமர் குருஷ்சேவும் 70 வருடங்களுக்குமுன் பிறந்தவர்.

ஒரே மாதம் ஒரே திகதியில் பிறந்த இவ்விருவரும் இருநாடுகளில் பிரதமராகியுள்ளனர். ஏப்ரல் 17-ந் திகதியில் ஏதும் விசேஷமுண்டா? அன்று பிறந்தவர்கள் பிரதமராகவோ, அல்லது முக்கிய பதவிவகிப்பவர்களாகவோ இருப்பார்களா என்பது தெரியவில்லை.

எப்படியும் ஏப்ரல் 17-ந் திகதியில் பிறந்தவர்களுக்கு புதுநம்பிக்கையையும் உற்சாகத்தையும் மேற்குறித்த இரு பிரதமர்களும் அளிக்கின்றார்கள்!

* * *

ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ், செத்துவிட்டதாக ஒரு புரளியை ஒருசெய்தி ஸ்தாபனம் சென்றவாரம் கிளப்பிவிட்டது! இதற்காக அந்த செய்தி ஸ்தாபனம் மன்னிப்புக் கேட்டுள்ளதுடன் இது பற்றி விசாரணை நடத்தி இதற்குப் பொறுப்பானவர்களை வேலையிலிருந்து நிறுத்தி வைத்துள்ளனராம்.

ஒருவர் தாம் செத்துவிட்டதாகச் சொப்பனம் கண்டால் அவர் நீடூழி வாழ்வாரென்று சொல்லுவதுண்டு. அதே போல் உயிருடனிருக்கையிலே குருஷ்சேவ் செத்துவிட்டதாக வதந்தி பரவியதன் பயனாக அவர் நீடூழி வாழவும்கூடும். யார் கண்டார்கள். உலக அமைதிக்காக உழைக்கும் அவர் நீடூழி வாழ்க! அமெரிக்காவுடனும் நல்லுறவு கொள்ள அவர் முற்பட்டுள்ளாராம். இந்த முயற்சி வெல்க!

* * *

உலகிலேயேஒருபெண்முதல் முதலாக ஒருநாட்டின் பிரதமராக ஆனது ஸ்ரீமாவோதான். அவர் 6 மாதம்கூட பதவி வகிக்க முடியாதென்றும் முதலில் சிலர் சாக்குருவி சோதிடம் கூறினர். பின்னர் 18 மாதங்களில் முடிவுகாலமென்று பகிரங்கக் கூட்டங்களில் சொல்லிவந்தனர். இந்தச் சோதிடங்கள் எதுவும் பலிக்கவில்லை.

சென்ற நான்கு வருடகாலமாக அவர் அப்பதவியிலிருந்து வருகின்றார். பல பெரிய பெரிய தவறுகள் நடந்திருக்கலாம். அதுவேறு விஷயம். என்றாலும் சென்ற 4 வருடகாலமாக அவர் அந்தப்பதவியிலேயே தொடர்ந்து இருந்துவர முடிந்ததே பெரிய சாதனையாகும்.

இப்போது இங்கு நடக்கும் அரசியல் சதுரங்கத்தை பார்த்தால் அவர் இன்னும் ஒருவருடத்துக்கும் பிரதமர் பதவியில் நீடித்து இருப்பாரென்றே தோன்றுகின்றது இலங்கையில் இதுவரை எந்தப் பிரதமரும் ஐந்துவருடகாலம் தொடர்ந்து அப்பதவியில் இருந்து பதவிகாலத்தைப் பூர்த்தி செய்ததில்லை. அந்தப் பாக்கியம் உலகத்திலே முதல் பெண்பிரதமருக்குக் கிடைப்பதாயின் அதுவும்

5-ம் பக்கம் பார்க்க

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஜூலையில் நடைபெறும்

பிரிட்டிஷ் பிரதமர் அறிவிப்பு

லண்டன், ஏப். 17

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஜூலைமாத முற்பகுதியில் லண்டனில் நடைபெறும். இந்த விபரத்தை பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் காமன்ஸ்சபையில் அறிவித்தார்.

காமன்வெல்த் மந்திரிகளின் மகாநாடு கடைசியாக 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்றது. ஜூலையில் நடைபெறும் இந்த மகாநாட்டுக்கான நிகழ்ச்சிநிரல் எதுவும் தயாரிக்கப்படவில்லையென்றும் உலக விவகாரங்கள் குறித்தும் சாம்ராஜ்ய பொருளாதார வளர்ச்சி பற்றியும் மகாநாட்டில் விவாதிக்கப்படுமென்றும் பிரிட்டிஷ் பிரதமர் மேற்படி கூறினர்.

மகாநாடு நடைபெறுவதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் சர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் கூறினர்.

பிரதமர் குருஷ்சேவுக்கு "சோவியத் வீரபுருஷ்" பட்டம்

மாஸ்கோ, ஏப். 17

தமது 70-வது பிறந்த தினத்தை இன்று கொண்டாடும் சோவியத் பிரதமருக்கு உலகின் பலபகுதிகளிலிருந்தும் ஆசிச்செய்திகள் வந்து குவிந்தன.

அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன், பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக் டக்ளஸ்ஹியூம் இந்தியப்பிரதமர் நேரு, ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், யுகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ, முன்னாள் பிரிட்டிஷ்பிரதமர் திரு. மாக்மில்லன், சீனத் தலைவர்கள் மா-சே-துங், சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் உட்பட பலதலைவர்கள் சோவியத் பிரதமருக்கு நல்வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தலைவர்கள் பிரதமர் குருஷ்சேவுக்கு நேரில் நல்லாசி தெரிவித்தனர்.

சோவியத் பிரதமரின் 70-வது பிறந்தினத்தை முன்னிட்டு சோவியத் அரசாங்கம் நேற்று திரு. குருஷ்சேவுக்கு "சோவியத் நாட்டின் வீரபுருஷர்" என்ற பட்டத்தை வழங்கியது.

சீனத் தலைவர்கள் அனுப்பிய ஆசிச்செய்தியில் நல்லகத்துடன் நீண்டகாலம் இருக்கவேண்டுமென்றும் தற்காலிகமான சீன-ரஷ்ய கருத்து வேறுபாடுகள் யாவும்மறைந்து உலகப் பிரச்னைகளை இருநாடுகளும் ஒன்று சேர்ந்து தீர்த்துவைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் அனுப்பிய செய்தியில் "சமாதானத்தை உலகில் நிரந்தரமாக்க தொடர்ந்து முழுமுயற்சிகள் எடுப்பீர்கள் என நம்புகிறேன்" என்பதாக குறிப்பிடுள்ளார்.

ஸ்ரீமாவுக்கு நேரு வாழ்த்து

புதுடில்லி, ஏப். 17

இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் 48-வது பிறந்தினத்தையொட்டி இந்தியப் பிரதமர் நேரு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். சகல மகிழ்ச்சியுடனும் தேகாரோக்கியத்துடனும் நீண்டகாலம் வாழவேண்டுமென்று பிரதமர் நேரு தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப்பிரதமர் தமது பிறந்தினத்தை இன்று நுவரேலியாவில் கழித்தார்.

ராக்கெட் பரீட்சை

திருவனந்தபுரம், ஏப். 17

திருவனந்தபுரம் தும்பா ராக்கெட் தளத்திலிருந்து நேற்று இருராக்கெட்டுகள் அனுப்பப்பட்டன. இந்த ராக்கெட்டுகள் 18,000 அடி உயரத்துக்குச் சென்றன. ராக்கெட்டுகளைப் பரீட்சிப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைத்திருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜோன்ஸன் திருப்தி

வாஷிங்டன், ஏப். 17

மனிலாவில் நடைபெறும் ஸீட்டோ மகாநாடு திருப்திகரமாகவிருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

நேற்று இங்கு நடைபெற்ற நிருபர்கள் மகாநாட்டில் அவர் பேசுகையில், வியட்நாமுக்கான அமெரிக்க கொள்கைகள் மிகவும் நல்லதாகவிருக்கின்றன என்று கூறினர்.

பட்ஜட் கோரிக்கை அங்கீகாரம்

புதுடில்லி, ஏப். 17

நடப்பு நிதியருடத்துக்கான பட்ஜட் கோரிக்கைகள் எல்லாவற்றையும் லோகசபை ஏற்றுக்கொண்டுள்ளது. சில செலவுக் கோரிக்கைகள் விவாதம் நடைபெறுமலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

நிதி இலாகாவின் செலவுக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் நிதிமந்திரி திரு. கிருஷ்ணமாச்சாரி பேசையில், வருமானவரிச் சட்டம் திருத்தப்படுமென்றும் இதனால் பல நல்ல பலன்கள் கிடைக்குமென்றும் கூறினர்.

அமெரிக்காவில் தமிழ் வகுப்புகள்

வாஷிங்டன், ஏப். 17

கோடைகால (ஜூன் முதல் ஆகஸ்ட்வரை) ஆசியப்படிப் புத் திட்டங்களை 50-க்கு மேற் பட்ட அமெரிக்கக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் அறிவித்துள்ளன. இத்தத்திட்டங்களின முக்கிய நோக்கம் நிபுணர்களல்லாதவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பிரதான ஆசிய நாகரிகங்களைப்பற்றி அடிப்படையாக அறிமுகம் செய்து வைப்பதாகும். பல பல்கலைக்கழகங்கள் கலந்து கொள்ளும் கோடைகால தெற்கு ஆசியப் படிப்புக்கள் கலிபோர்னியாவில் பெர்க்கலேயில இரண்டு வகுப்புகளாக நடத்தப்படும். இந்த முயற்சியில் கலிபோர்னியா, சிக்காகோ, விஸ்கான்ஸின் பல்கலைக்கழகங்கள் மினஸோட்டா, மிசிகன் பல்கலைக்கழகங்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கின்றன

தமிழ், தெலுங்கு, உருது, வங்காளி முதலிய மொழிகளில் தீவிரபயிற்சியும் இத்தத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

பாஸ்டன பல்கலைழகம் இந்தியாவில் ஒப்பியல் கல்வி, இந்தியாவும் காமன்வெல்த்தும், ஹிந்துசமயம், பௌத்த சமயம், கீழ்த்திசை தத்துவம் ஆகியவற்றையும் பென்ஸில்வேனியாப் பல்கலைக்கழகம் இந்திய நாகரிகம், மரபுகள் அறிமுகப்படிப்பு, இந்திய வரலாறு, தமிழ், ஹிந்தி, உருது, சமஸ்கிருதம் ஆகியவற்றையும் போதிக்கும்.

முதல் காட்சி

டோக்கியோ, ஏப். 17

ஜப்பானிலுள்ளவர்கள் இனிமேல், பிரிட்டனிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை டெலிவிஷனில் கண்டுகளிக்கலாம். நேற்று முதன்முதலாக ஜப்பான் பிரதமர் திரு. இக்கரடோ டெலிவிஷனில் தோன்றி நன்றி தெரிவித்த காட்சியை ஐரோப் பாவிலுள்ள மக்கள் டெலிவிஷன மூலம் கண்டு களித்தனர்.

இலவச கல்வி

புதுடில்லி, ஏப். 17

சீனத் தாக்குதலில் போது உயிரிழந்த, காயமடைந்த, ஊனமுற்ற இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி முதல் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்குவதென்று உத்தர பிரதேச அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

புட்டோ

ஜாகர்த்தா, ஏப். 17

பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோவும் இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோவும் நேற்று இங்கு சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். அவர்களின் பேச்சுக்களில் பல பிரச்னைகள் சம்பந்தப்பட்டிருந்தன என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

திரு. புட்டோ நேற்று மாலை சிங்கப்பூர் சென்றார். மணிலாவில் இவர் இரண்டு நாட்கள் தங்கியிருப்பார்.

யேமன் குற்றச்சாட்டு

நியூயோர்க், ஏப். 16

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தையும் மீறி பிரிட்டிஷ் குண்டுவீச்ச விமானங்கள் இம்மாதம் 10 ம் திகதி யேமன்மீது பறந்தன என்று ஐ. நா. பாதுகாப்புச் சபையில் யேமன் புகார் செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு யேமன் எழுதிய கடிதமொன்றில் பிரிட்டனின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைக் கண்டிக்குமாறு கேட்டுள்ளது.

பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் பிரதமர் சர். அலெக் டக்ளஸ் ஹியூம் நேற்றுப் பேசுகையில், யேமனுக்கும் தென் அராபிய கமன்வெல்த்துக்குமிடையேயுள்ள எல்லையைக் குறிப்பதில் ஐ. நா. கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உத்தரவின்றி அனுமதி இல்லை

ஸான்ஸிபார், ஏப். 17

ஸான்ஸிபார் வெளிவிவகார மந்திரியின அனுமதியின்றி எவரும் நாட்டில் குடியேற முடியாதென்று ஸான்ஸிபார் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஸான்ஸிபாருக்குச் சமீபத்தில் வந்திருப்பதைத் தொடர்ந்தே ஸான்ஸிபார் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

"போர் நிறுத்தக் கோட்டை மீறினர்"

ஜம்மு, ஏப். 17

ஜம்மு—காஷ்மீர் போர் நிறுத்தக்கோட்டை பாகிஸ்தானிய துருப்புகள் தாண்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது காப்புக்கென இந்திய துருப்புகள் கட்டளை என்றும் உயிர்ச் சேதமெதுவுமில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக இந்திய, ஐ. நா. பார்வையாளர் கோஷ்டியிடம் முறையிட்டுள்ளது.

இளைஞன் தாயானான்!

லண்டன், ஏப். 17

பாரிஸைச் சேர்ந்த 17 வயதுள்ள இளைஞன் ஒருவர் ஒரு குழந்தைக்கு தாயானான்! இந்தக் குழந்தை அந்த இளைஞனின் நெஞ்சுக்குள் இருந்தது!

பாரிஸைச் சேர்ந்த ஜீன் ஜாக்வஸ் லோரண்ட் என்ற இந்த இளைஞன், தனது நெஞ்சில் வலி இருப்பதாகக் கூறவே, டாக்டர்கள் அவரது நெஞ்சின் வலது பக்கத்தை ரணசிகிச்சை செய்தனர். என்ன ஆச்சரியம்! எலும்புகளும், வயிறும், முடிகளும், பல்லும் கூடவுள்ள ஒரு கருவைக் கண்டு டாக்டர்கள் வியந்தனர். இக்குழந்தை இறந்து கிடந்தது.

17 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இளைஞனுடன் கூடவே பிறக்கவேண்டியிருந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்றுதான் இக்குழந்தை என்று டாக்டர்கள் கருதுகின்றனர். இக்கரு, இளைஞனுடைய உடலில் மெதுவாக வளர்ந்ததால் அதை இளைஞனால் உணரமுடியவில்லை எனக் கூறப்பட்டது.

இப்படியொருசம்பவம் முன்னிகழவில்லையென்று பிரிட்டிஷ் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

சரக்குக் கப்பல்

புதுடில்லி, ஏப். 17

விசாகபட்டினத்திலுள்ள ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் துறையில் கட்டிமுடிக்கப்பட்ட 13,600 தொன் நிறையுள்ள சரக்குக் கப்பலை நேற்று ஸ்ரீமதி இந்திராகாந்தி மிதக்கவிட்டார். இந்தக் கப்பல் கட்டும் துறையில் இதுவரை 36 கப்பல்கள் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன.

இலங்கைத் தூதர்

கொழும்பு, வெள்ளி

ஸ்தலஸ்தாபன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. வி. சி. ஜயசூரியா, பர்மாவுக்குரிய இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜூலை மாதத்தில் அவர் ரங்கூன் செல்வார் என எதிர்பார்க்கப் படுகிறது.

26 வருடங்களுக்கு அதிகமாக அரசாங்க சேவையிலிருக்கும் திரு. ஜயசூரியா, 1938-ல் ஸ்தலஸ்தாபன உதவிக் கமிஷனராக நியமிக்கப் பட்டார். சிவில் சேவையைச் சேராத அவர், 1947-ல் ஸ்தலஸ்தாபன கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

மாஸ்கோவிலுள்ள

மே.ஜேர்மன் செய்தி அலுவலகத்தை மூடுமாறு ரஷ்யா உத்தரவிட்டது

நிருட்டுக்கும் வெளியேற்ற உத்தரவு!

மாஸ்கோ, ஏப். 17

"சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் இறந்துவிட்டார்" என்று தவறான செய்தியை வெளியிட்ட மேற்கு ஜெர்மன் செய்தி ஸ்தாபனத்தின் மாஸ்கோ கிளையை மூடிவிடுமாறு சோவியத் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

"சோவியத் பிரதமர் குருஷ்சேவ் இறந்துவிட்டார்" என்று இச்செய்தி ஸ்தாபனம் செய்தியொன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து உலகில் பெரும் பரபரப்பேற்பட்டது. "கொலை செய்யப்பட்ட அமெரிக்க அதிபர் கென்னடியை இழந்த நாம் மற்றுமொரு சமாதானப் பிரியரை இழந்துவிட்டோம்" என்று ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள பல ராஜதந்திரிகள் கவலை தெரிவித்ததுடன் பல நாடுகளின் வாழ்த்துக்களும் இதை அறிவித்திருந்தன. சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' இச்செய்திக்கு மறுப்புத் தெரிவித்திருந்தது.

மேற்கு ஜெர்மன் செய்தி ஸ்தாபனத்தின் மாஸ்கோ நிருபர் 24 மணி நேரத்தில் ரஷ்யாவிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் சோவியத் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் ரத்து

டமாஸ்கஸ், ஏப். 17

மத்திய சிரியாவில் ஏற்பட்ட புரட்சி நசுக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரகடனம் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக சிரிய பிரதமர் அறிவித்துள்ளார். சிரியா அரசாங்க அலுவலர்கள், அரசாங்கத்தின் மீதுள்ள தங்கள் முழுநம்பிக்கையையும் பிரதமருக்குத் தெரிவித்துள்ளனர்.

ஏகபோக கமிஷன்

புதுடில்லி, ஏப். 17

இந்திய அரசாங்கம் ஏகபோக கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது. சுபரீம்கோர்ட் நீதியரசர் தலைமையிலுள்ள இக்கமிஷன் அடுத்த வருடம் அக்டோபர் மாதத்துக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்கும்.

மலேசியாவுக்கு இராணுவ உதவி

கான்பரா, ஏப். 17

மலேசியாவுக்கு ஆஸ்திரேலியா மேலும் பல இராணுவ உதவிகளை அளிக்குமென ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

"சிறுபான்மையினர் முன்னேற்றம் கல்வியில்தான் தங்கியுள்ளது"

—கோப்பாய் எம். பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

"சிறுபான்மை இனத்தின் விடுதலையும் நல்வாழ்வும் அந்நாட்டு மக்களின் சிறந்த கல்வியறிவிலும் அவர்களின் கூட்டுமுயற்சியிலுமே தங்கியிருக்கிறது. உதாரணமாக பார்சி 'சமுதாய'த்தவர் பல துறைகளிலும் உயர்ந்த நிலைமை அடையக் காரணம் அவர்களின் கல்வியறிவேயாகும்."

இவ்வாறு கோப்பாய் எம்.பி. திரு. மு. பாலசுந்தரம் கோப்பாய் தெற்கு கிராமமுன்னேற்றச்சங்க வருடாந்தவிழாவில் பங்குபற்றிப் பேசும்பொழுது குறிப்பிட்டார். இவ்வாண்டு விழா இருபாலை மாதர்சங்க முன்றலில் திரு. தி. பரமானந்தராசாவின் தலைமையில் நடைபெற்றது.

திரு. பாலசுந்தரம் தொடர்ந்து பேசும்பொழுது இந்தியாவின் அணு ஆராய்ச்சிக் குழுத் தலைவர் திரு. பாபா சிறந்த விஞ்ஞானியாகத்திகழ அவருடைய சமூகமே காரணகர்த்தர்களாக விளங்கினர் என்றும் நம் இளைஞர்கள் நமது சமூக முன்னேற்றத்திற்குத் தொண்டாற்றி நம் நாட்டின் விடுதலைக்கும் வழி வகுக்க முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பண்டிதை திருமதி சத்திய தேவி துரைசிங்கம், திரு. வைத்தீஸ்வரஐயர், கிராம முன்னேற்றச்சங்க உத்தியோகத்தர் திரு. ஜே. குமாரசாமி, திரு. சி. பொன்னம்பலம், திரு வே. சன்முகயா, திரு. வ. தெய்வேந்திரம் ஆகியோரும் பேசினர் கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டடத்தை ஒரு பொது இடத்தில் கட்ட வேண்டுமென்றும், பொதுமக்களின் பாவனைக்காக ஒரு பிரேத வண்டி செய்வித்தல் வேண்டுமெனவும், அங்கு 3 மாதத்திற்கு முன்பு ஆரம்பித்த சங்கீதவகுப்பிற்கு உதவி மான்யம் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இறுதியில் உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

மூளாய் பிள்ளையார் கோவில் திருவிழா

சுழிபுரம், வெள்ளி

மூளாய் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் 16-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. தினமும் விசேஷ அபிஷேகங்களும் கூட்டுப்பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பெற்றோன் விழா

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை பெற்றோர் தின விழா வட்டார வித்தியாதிகாரி திரு. எஸ். சபாபதி தலைமையில் நடைபெற்றது. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கி. பரராசசிங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பாடசாலை மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இசைக் கல்லூரி பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் ரசிக கலாமன்றத்தின் பெற்றோர் தினவிழா அண்மையில் கோப்பாய் கிறீன் தவக்கல்லூரியில் நடைபெற்றது. கலாமன்றம் நடத்திவரும் இசைக்கல்லூரி சிறிய காலத்தில் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளதுகுறித்து மன்றத்தலைவர் திரு. எஸ். சோமசுந்தரம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எம். எஸ். இராசசிங்கம், பி. சம்பந்தன், எம். பாலசுந்தரம் எம். பி., எஸ். அம்பிகைபாகன், திருமதி வேதவல்லி கந்தையா ஆகியோரும்கூட்டத்தில்சொற்பொழிவாற்றினர். மன்றத்தின் ஆதரவில் இயங்கும் இசைக்கல்லூரி வளர்ச்சி பற்றி கல்லூரித்தலைவி செல்வி எஸ். தங்லட்சுமி அறிக்கை சமர்ப்பித்தார்.

வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்குத்தோற்றும் மாணவமாணவிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கும், பின்னகவிடம் உள்ள இசையாற்றலைவெளிப்படுத்திமேன்மேலும்வளர்க்கவும் இந்தஇசைக்கல்லூரி உதவுவதாகஆசிரியதரிசி திரு. ஜி. வைத்திலிங்கம் தமது நன்றியுரையில்குறிப்பிட்டார்.

பரிசு பெற்ற மாணவ மாணவிகள் விபரம் வருமாறு:-

1-ம் பிரிவு:- செல்வன்கள் கு. ஜெயச்சந்திரன், க. சரவணபவன், இ. சிவசோதிபாலன், செல்விகள் கு. கிரியாம்பாள், இ. பேரின்பமலர், வை. புஷ்பவதி, மு. ஸ்ரீரஞ்சனி, க. வனஜா இ பத்மராணி, அ. சாந்தினி தேவி, இ. சந்திராதேவி, க. ஸ்கந்தராணி, வை. சந்திரமதி, கா. சீதாலட்சுமி.

2-ம் பிரிவு:- செல்விகள் இ. வேதநாயகம், மு. அமிர்தரஞ்சிதம், வை. பிரேமாவதி, கு. வசந்தகுமாரி, அ. திலகராணி.

3-ம் பிரிவு:- செல்விகள் கு. கிரிஜகுமாரி, சே. தேவராஜேந்திரராணி, வ. ஞானமணி, பொ. உருத்திராதேவி.

4-ம் பிரிவு:- செல்வி பா. கமலாதேவி, செல்வன் வை. பாலகிருஷ்ணராஜன்.

சங்கீதபூஷணம் திரு த. இராசலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியுடன் விழா முடிவுற்றது.

நெடுந்தீவு கிராமசபைத் தேர்தல் முடிவுகள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

கிராமசபைத் தேர்தலில் 10-வதுவட்டாரத்தில் போட்டியிட்ட நெடுந்தீவு முன்னாள் தலைமைக்காரரான திரு. நாகேந்திரர் கணபதிப்பிள்ளை வெற்றிபெற்றார். 12-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட முன்னாள் கி. ச. தலைவர் திரு. எம். கணபதிப்பிள்ளை (72) அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். போட்டியிட்ட பெண் அபேட்சகர்கள் தோல்வியடைந்தனர்.

வெற்றி பெற்றோர் விபரம்:

1-ம் வட்டாரம்: திரு. அரியகுட்டி கந்தையா.

2-ம் வட்டாரம்: திரு. ஐயம்பிள்ளை தமோதரம்பிள்ளை.

3-ம் வட்டாரம்: திரு. வேலாயுதர் பெருமையினர்.

4-ம் வட்டாரம்: திரு. குமாரசாமி ஆறுமுகம்.

5-ம் வட்டாரம்: திரு வேலுப்பிள்ளை கந்தையா.

6-ம் வட்டாரம்: திரு. மரியான் அகஸ்தீன்.

7-ம் வட்டாரம்: திரு. பற்றிகஸ் சேகு.

8-ம் வட்டாரம்: திரு. மரிசலீன் மரியான்.

9-ம் வட்டாரம்: திரு. மரியான் ஜூகாஸ்.

10-ம் வட்டாரம்: திரு. கணபதிப்பிள்ளை நாகேந்தர்.

11-ம் வட்டாரம்: திரு. எஸ். இராயப்பு.

12-ம் வட்டாரம்: திரு. எம். கணபதிப்பிள்ளை.

13-ம் வட்டாரம்: திரு. மயில்வாகனம் கந்தையா.

14-ம் வட்டாரம்: திரு. சந்தியாபிள்ளை வேலாதாஸ்.

15-ம் வட்டாரம்: திரு. வேலுப்பிள்ளை லவரகோதா

சேமலாப நிதி வசதி அளிக்க கோரிக்கை

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது காங்கேசன்துறை சிமித் தொழிற்சாலை வேலைகளை ஒப்பந்தம் எடுத்து நடத்தும் கம்பனிகளில் வேலைசெய்யும் தொழிலாளருக்கு சேமலாப நிதி வசதியளிக்கப்படவேண்டுமென தொழில் கமிஷனரைக் கேட்டுக்கொள்வதெனத்தீர்மானிக்கப்பட்டது.

●

காங்கேசன்துறை, வெள்ளி

கலால் பகுதி உதவி கமிஷனர் திரு. கே. திருநாவுக்கரசு காங்கேசன்துறையிலுள்ள கலால் காரியாலயத்துக்கு மேற்று உத்தியோகபூர்வமாக விஜயம் செய்து பார்வையிட்டார்.

சாஸ்திரி

புதுடில்லி, ஏப். 16

இந்தோ-பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகளின் அடுத்த சந்திப்புக்கு முன் வகுப்புவெறி தூண்டப்படக்கூடாது என்றும், பாகிஸ்தான் ரேடியோவின் நிகழ்ச்சிகள் இதற்கு உதவியாக இல்லை என்றும் மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்தார்.

வெளிநாட்டு உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்துக

அரசாங்கம் உத்தரவு

கொழும்பு, வெள்ளி

தங்களுக்கு ஒதுக்கப்படும் வெளிநாட்டு உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று சிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகாத்தலைவர்களுக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

வெளிநாட்டு தொழில்நுட்ப உதவிகள் சம்பந்தமாக நிறைசேரியுடன் நேரடித் தொடர்பு கொண்டு இவ்வுதவிகளை நல்ல முறையில் பயன்படுத்த ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்படவேண்டுமென்றும் ஒவ்வொரு அமைச்சும் கோரப்பட்டுள்ளன.

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளை பல அரசாங்க பகுதிகள் சரியான முறையில் உபயோகிப்பதில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்கூறிய நடவடிக்கையை எடுக்க நேரிட்டதென்று தெரியவருகிறது.

கடந்த மூன்று வருடங்களிலும் பல்வேறு வெளிநாட்டு அரசாங்கங்களினாலும் சகாதாரப் பகுதிக்கு வழங்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் பண உதவி இதுவரை பயன்படுத்தப்படவில்லையெனத் தெரியவருகிறது. இதுபோலவே பல அரசாங்க பகுதிகளும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளை சரியான முறையில் உபயோகிக்கவில்லையென்று அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சமயச் சொற்பொழிவு

மாதகல், வெள்ளி

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் உற்சவகாலத்தில் 2-ம் நாளன்று நடைபெற்றசமயச்சொற்பொழிவில் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை "மகோற்சவம்" என்னும் பொருள்பற்றி பேசுகையில் ஆலயத்தில் நடைபெறும் கிரியைகளின் காரணத்தையும், கற்பூர தீபத்தின் தத்துவத்தையும், கொடியேற்ற விழாவின் தத்துவக் கருத்துகளையும், கதைகள் மூலம் எடுத்துரைத்தார்.

இறுதியில் பண்டிதர். இ. இராமலிங்கம் நன்றி கூறினார்

தைப்பேயில் டின்ரஸ்க்

தைப்பே, ஏப். 17

மணிலா சென்றிருந்த அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டின்ரஸ்க் நேற்று தைப்பே வந்துசேர்ந்தார்.

ஒஸ்டர்மில்க்

குழந்தைகள் அழகாகவும்
ஆரோக்கியமாகவும் திகழ்கிறார்கள்

தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்புச்சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

பத்திரிகை கார்ப்பரேஷன் நிறுவுவது நல்லது

கமிஷன்முன் மேர்வின் சில்வா

கொழும்பு, வெள்ளி

பத்திரிகைக் கார்ப்பரேஷன் ஒன்று நிறுவவேண்டுமென்ற யோசனையைத் தாம் வரவேற்பதாகவும் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு பயிற்சி நிலையம் நிறுவப்படவேண்டியது அவசியமாகுமென்றும் பத்திரிகைக் கமிஷன் முன் நேற்று தொடர்ந்து சாட்சியமளிக்கையில் இலங்கைப் பத்திரிகைச் சங்கம் தெரிவித்தது.

சங்கத்தின் ஆதரவில் சாட்சியமளிக்கையில் திரு. நிமால் கருணதிலகா தெரிவித்ததாவது:-

ஏரிக்கரைப் பத்திரிகைக் கம்பெனியில் பென்ஷன் திட்டமிருக்கின்றது. ஆனால் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமே பென்ஷன் வழங்கப்பட்டது. 30 வருடங்கள் தொடர்ச்சியாகத் தமது கம்பெனியில் வேலைசெய்தவர்களுக்கு 'டைம்ஸ்ஆப் சிலோன்' ஸ்தாபனமும் பென்ஷன் வழங்கியது. சேமலாபநிதி எல்லாக் கம்பெனி ஊழியர்களுக்கும் உள்ளதுபோலவே பத்திரிகையாளர்களுக்கும் உண்டு. ஆனால் விதவை பிள்ளைகள் பென்ஷன் கூடிய பென்ஷனையே நான் குறிப்பிடுகின்றேன். நிருபர்கள் புகைப்படப் பிடிப்பாளர்கள் ஆகியோருக்கு அவர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் ஆபத்துக்குள்ளாக வேண்டிவருவதால் பத்திரிகையாளர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் அவசியமாகும்.

வெளியூர்களிலுள்ள நிருபர்கள் ஏ, பி, ஸியென 3 தரத்தினராகப் பிரிக்கப்படவேண்டும். ஊர்களின் செய்தி முக்கியத்துவம் குறித்து அவர்களின் தரத்தை நிர்ணயிக்கலாம். ஒவ்வொரு தரத்தினருக்கும் படி வழங்கப்படவேண்டும். பத்திரிகையின் தலைமைக் காரியாலயத்தில் பத்திரிகையாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது 5 வருடங்கள் ஏ அல்லது பி பிரிவு நிருபராக இருந்தவர்களை வேலைக்கமர்த்தவேண்டும்.

எங்களைப் பொறுத்தமட்டில் பத்திரிகையாளர்களாவதற்கு ஒரு விசேஷ தராதரம் தேவையில்லை. பத்திரிகையாளர்களாவதற்கு ஒரு குறிப்பிட்ட தராதரம் தேவையென்று வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை. இப்போது பத்திரிகையாளர்கள் தாமாகவே பத்திரிகைத் தொழிலைப் படித்துக்கொள்கிறார்கள். பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு பயிற்சி நிலையம் வேண்டும். பல்கலைக்கழகமொன்றில் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு பகுதியை ஆரம்பிக்கலாம். எனினும் பல்கலைக்கழகத்தில் தான் பயிற்சியளிக்கப்படவேண்டுமென்ற அவசியமில்லை. கொழும்பு நகரின் மத்தியில் ஒரு பசிற்சி நிலையம் நிறுவி அங்கு சாதனையுடன் கூடிய பயிற்சியளிக்கலாம்.

இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் உப தலைவர் திரு. மேவியன் டி' சில்வா சாட்சியமளிக்குமுன் பத்திரிகையாளர்கள் பட்டியலொன்றைக் கமிகமிஷனரிடம் சமர்ப்பித்தார். ஏரிக்கரைப் பத்திரிகைகள் 'தவஸ்' 'டெயிலி மிறர்' ஆகிய பத்திரிகைகளில் உள்ள பத்திரிகையாளர்களின் பெயர் மட்டும் உள்ளதாகவும் 'டைம்ஸ் ஆப் ஸிலோன்' பத்திரிகையாளர்களின் பெயர்களை எடுக்கமுடியாமல் போய்விட்டதாகவும் அவர் தெரிவித்தார். அப்பட்டியலில் பத்திரிகையாளர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

திரு. மேர்வின் டி' சில்வா தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

தேசிய செய்தி ஸ்தானம் ஒன்று நிறுவப்படவேண்டும். தேசிய செய்தி ஸ்தாபனமென்றால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கீழ் இருக்கவேண்டுமென்ற அர்த்தமில்லை. பர்மாவில் சில மாதங்களுக்கு முன்னர் தேசிய செய்தி ஸ்தாபனம் ஒன்று நிறுவப்பட்டது. 1956-லிருந்தே நான் தேசிய செய்திஸ்தாபனம்பற்றிப்பிரஸ்தாபித்து வருகிறேன். பத்திரிகைக் கார்ப்பரேஷன் அமைப்பது வரவேற்கத்தக்கது.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

18-4-64 சனி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும்—செய்திச் சுருள், 7-00 புல்லாங்குழல்—பி. ஜேசுதாசன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு—'நகைச்சுவை'—ஆர். டி. சுப்பிரமணியம், 9-30 பாட்டு—பாலம் லக்ஸ் மணன், 10-00 நேயர் விருப்பம்.

19-4-64 ஞாயிறு

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 திரை இசை.

பகல் 11-30 சிறுவர் மலர், 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு—சிவஞானசுந்தரி விஜயரத்தினம், 5-45 திரை இசை.

இரவு 6-15 ஜலதரங்கம்—சசிலேகா பாலசந்திரன், 6-45 பாட்டு—எஸ். மார்க்கண்டேயர், 7-15 வீணை, 7-45 நாடகம்—'மாப்பிள்ளை மகாலிங்கம்'—எஸ். சண்முகவடிவேல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மாதர் விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

திருச்சி

18-4-64 சனி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 கடத்தூர் சங்கரராமஐயர்—வீணை.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 கடத்தூர் சங்கரராமஐயர்—வீணை,

மாலை 5-15 திரைப்பட இசை.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 தளபதி—நாடகம்—எம். எல். இந்திரா, குமாரி கமலா, எஸ். கலாவதி, கே. வி. ஸ்ரீநிவாசன், பி. வி. நரஸிம்ஹபாரதி, என். என். கண்ணப்பா ஆகியோர் நடிப்பது, 8-15 இசைக் கோவை—வயலின், 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

19-4-64 ஞாயிறு

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மகாராஜபுரம் கே. நாகராஜன்—பாட்டு, 8-15 திருப்பாம்பரம் என். சே மகந்தரம் சகோதரர்கள்—நாகஸ்வரம்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம்.

மாலை 3-00 அன்னை இல்லம் ஒலிச் சித்திரம், 5-15 மகாராஜபுரம் கே. நாகராஜன்—பாட்டு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடோடி இலக்கியம் பரிசீலனை—கி. வா. ஜகந்நாதன், 7-45 நாடோடி இலக்கிய கதம்பம், 9-45 மெய்ப்பொருள்நாயனார் — சங்கீத உபந்நியாசம்.

ஜூன்றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டத்தக்கதே

* * *

இன்றைய அரசியல் நிலை பற்றி விஷயமறிந்த ஓர் அன்பரைக் கேட்டேன் "இடதுசாரி ஐக்கிய முன்னணியும் சுதந்திரக்கட்சியும் அநேகமாக கூட்டாக புதிய அரசாங்கம் அமைக்கலாம். அப்படி அமைத்தால் இரு கட்சிகளிலிருந்தும் சிலர் விலகிவிடக்கூடும். இதனால் அந்தக் கூட்டு அரசாங்கத்தின் பலம் குறைவாகவே இருக்கும். அச்சமயம் தமிழரசுக்கட்சியின் உதவியை அவ்வித அரசாங்கம் நாட அதிகக் காரணமுண்டு. அச்சமயம் தமிழரசுக்கட்சி அதிகாரத்திலுள்ள அரசாங்கத்தை எதிர்க்காமல் தமிழரின் இழந்த உரிமைகளைப் பெறக்கூடுமானவரை அச்சந்தர்ப்பத்தை ராஜதந்திரத்துடன் உபயோகிக்க நல்ல வாய்ப்புக் கிடைக்கலாம்.

"ஏற்கெனவே அவ்வித சந்தர்ப்பம் ஒருமுறை கிடைத்தது. அதிகாரத்திலிருந்த யு. என். பி. கட்சியினர் பலவீனமான நிலையில் தமிழரசுக் கட்சியின் உதவியை நாடினர். அச்சமயம் அவர்களது கோரிக்கையை ஒப்புக் கொண்டிருந்தால், நாட்டின் அரசியலே வேறுவிதமாக இருந்திருக்கலாம். அச்சந்தர்ப்பத்தை இழந்தது பெரிய தவறு. அத்தவறை மீண்டும் தமிழரசுக்கட்சி செய்யாமல் விசேஷ ராஜதந்திரத்துடன் நடந்து, தமிழருக்குக் கூடுமான நன்மை கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கிடையே தமிழ்த்தலைவர்களிடையேயும் 'சோஷலிஸ்' ரீதியில் புதியஒற்றுமை ஏற்படுமாயின் அது தமிழருக்கு மிக உதவியாக இருக்கும்" என்று கருத்துப்படக்கூறினார் அந்த அன்பர் எல்லாம் ஜூலை மாதத்துக் கிடையில் தெரியும். என்ன நடக்கிறது பார்ப்போம்.

* * *

விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை மேலாடு புரமூன்றும் பொடி செய்தானைப், பண்ணிலவு பைம்பொழில் சூழ் பழனத்தானைப் பகம் பொன்னின் நிறத்தானைப் பால் நீற்றானை, உண்ணிலவு சடைக் கற்றைக் கங்கையானைக் கரந்து மையோடுடனாகி யிருந்தான் தன்னைத், தெண்ணிலவு தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

— திருநாவுக்கரசர்

அல்லைப்பிட்டி . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

3-ம் வட்டாரம்

பி. நமசிவாயம்	132
எஸ். சதாசிவம்	84
எஸ். சின்னத்தம்பி	49
வி. கதிரவேலு	47

4-ம் வட்டாரம்

எம். வினாசித்தம்பி	222
பி. கந்தையா	219
ஐ. கந்தையா	43
எஸ். கயிலாயபிள்ளை	01

5-ம் வட்டாரம்

பி. சுப்பிரமணியம்	202
ஐ. கயிலாயபிள்ளை	176
எஸ். சண்முகராசா	48

6-ம் வட்டாரம்

எம். குலசேகரம்பிள்ளை	207
எம். ஆறுமுகம்	194
எஸ். கந்தவனம்	108
எஸ். பொன்னம்பலம்	56

7-ம் வட்டாரம்

கே. செந்தில்நாதன்	123
எம். கனகசபாபதிப்பிள்ளை	103
எஸ். சாந்தலிங்கம்	25

8-ம் வட்டாரம்

ஏ. பி. சண்முகநாதன்	280
என். துரைசாமி	244

9-ம் வட்டாரம்

ஏ. மார்க்கண்டு	218
வி. பரமசுந்தரம்	168
பி. கந்தசாமி	162
என். சுந்தரம்	08

உடுவில் கைப்பந்தாட்ட கழகம் வெற்றி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுவில் கைப்பந்தாட்டக் கழகத்தினர் சாம்பியன்களாக வெற்றி பெற்றனர்.

மொத்தம் 15 கழகங்கள் கலந்துகொண்ட இப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் உடுவில் - பருத்தித்துறைக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்றது.

இரு கோஷ்டிகளும் முறையே 16- 15, 15- 10, 15- 8 புள்ளிகளைப் பெற்றன.

உடுவில் கோஷ்டியினருக்கு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் அளித்த வெற்றிக் கிண்ணம் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தால் வழங்கப்பட்டது.

'பி' பிரிவுச் சாம்பியனாக சிவராசா கழகத்தினர் வெற்றி பெற்றனர். இரண்டாம் இடத்தைப் பருத்தித்துறை செவின்ஸ்ரார் கோஷ்டியினர் பெற்றனர்.

புயலும் மழையும்

டாக்கா, ஏப் 17

டாக்காவில் நேற்று மூன்று மணிநேரம் சுமாரான புயல் வீசியது. புயலைத் தொடர்ந்து நல்ல மழை பெய்தது. சேதமெதுவும் இல்லை.

வரி விளம்பரம்

அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

காணி மலிவு விற்பனை

ததன்னந் தோட்டத்திற்கேற்றதும், நெல் வேளாண்மைக்கேற்றதும், குடியிருப்புக்கேற்றதும் அதி முக்கியமான இடங்களில் அமைந்ததும், முன்னூறு ரப்பு விஸ்தீரணமுள்ளதுமான நான்கு காணித்துண்டுகள் அல்லைப்பிட்டியில் மலிவாக விற்கப்படவிருக்கின்றன. விபரங்களுக்கு என்னுடன் தொடர்புகொள்க. க. இரத்தினசிங்கம், 91, பெரியதெரு, யாழ்ப்பாணம். 242

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

மகளிர் மன்றம்

ஆவரங்கால், வெள்ளி

புத்தகலட்டி மளிர் மன்றம் செல்வி கி. தவமணிதேவி தலைமையில் ,புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணுவித்தியாலயத்தில் அங்கு ரார்ப்பணம் செய்யப்பட்டது.

இக்கிராமத்தில் முன்புநடைபெற்று தற்போது கைவிடப்பட்டுள்ள பள்ளவேலை, கயிறு திரித்தல், நெசவு நெய்தல், போன்ற கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதும், சமய, சமூக, கல்வி வளர்ச்சியில் மகளிரை ஊக்குவிப்பதுமே இம்மன்றத்தின் நோக்கமென தெரிவிக்கப்பட்டது. புதுவருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவி: திருமதி முருகேசு கமலவேணி. உபதலைவி: செல்வி செல்லர் விமலாதேவி. காரியதரிசி: செல்வி சின்னத்தம்பி திருசசெல்வம். உபகாரியதரிசி: திருமதிமாசிலாமணி பத்மாவதி. தனாதிகாரி:ா செல்வி வைரமுத்து சர்வேஸ்வரி.



எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, கிருமி, கறன், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானால் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த விடோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

அல்லைப்பிட்டி, வேலணை கிராமசபைத்தேர்தல் முடிவுகள்

தலைவர் இருவரும் தோல்வி

ணர்காவற்றுறை, வெள்ளி பதின்மூன்று வட்டாரங்களைக்கொண்ட அல்லைப்பிட்டிக் கிராமசபையின் தேர்தலில் 5-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட தற்போதைய தலைவரான திரு. கைலாசபிள்ளை 38 வாக்குகளைக் குறைவாகப் பெற்றுத் தோல்வியடைந்தார். விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்

நாகநாதர் தாமோதரம் பிள்ளை 82
அருளானந்தம் செல்லத் துரை 52
இராசரத்தினம் ஆறுமுகம் 36
திருநாமம் பொன்னம்பலம் 27

2-ம் வட்டாரம்

ஞானசுந்தரம் செல்லப்பா 76
கந்தையா இராமு 63

3-ம் வட்டாரம்

செபஸ்தி இருதயநாதர் 55
பாலசிங்கம் நீக்கிலாப் பிள்ளை 37
இனியதம்பி சாமுவேல் 30

4-ம் வட்டாரம்

கதிரவேலு கந்தையா 74
அந்தோனிப்பிள்ளை அந்தி ரேகப்பிள்ளை 70
சபாரத்தினம் சின்னத்தம்பி 45

5-ம் வட்டாரம்

கட்டாசா வேலுப்பிள்ளை 77
சிவரத்தினம் குழந்தைவேலு 45
நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 35

6-ம் வட்டாரம்

கனகசுந்தரம் இராமலிங்கம் 139
கைலாசபிள்ளை கணபதிப் பிள்ளை 111

7-ம் வட்டாரம்

நாகலிங்கம் கணநாத பிள்ளை 76
ஏரம்பு வேலுப்பிள்ளை 68

8-ம் வட்டாரம்

குலசிங்காதன் கார்த்திகேசு 58
இலங்கையர் கந்தையா 56
கதிரவேலு செல்லத்தம்பி 17

10-ம் வட்டாரம்

புலேந்திரன் கபிரியேல் 62
செல்லத்துரை தவமிராயகம் 61
இராசையா செல்லத்தம்பி 40
அந்தோனி வேலன் 35

11-ம் வட்டாரம்

வி. செல்வரத்தினம் 80
எம். இராசதுரை 65

12-ம் வட்டாரம்

என். கந்தையா 95
எஸ். கணபதிப்பிள்ளை 67
எஸ். செல்வராசா 14

13-ம் வட்டாரம்

எம். கணபதிப்பிள்ளை 130
எஸ். திருநாவுக்கரசு 64

●

யாழ்ப்பாணம், வெள்ளி நேற்று கூடைபெற்ற வேலணை கிராமசபைத் தேர்தலில் முதலாம் வட்டாரத்தில் போட்டியிட்ட எஸ். முருகேசு என்பவரும் 4-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட எஸ். கயிலாயபிள்ளையும் தலா ஒரு வாக்கு மட்டுமே பெற்றிருந்தனர். 1-ம் வட்டாரத்தில் எஸ். கதிரவேலு 2 அதிகப்படியான வாக்குகளாலும், 4-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட எம். விஜசித் தம்பி 3 அதிகப்படியான வாக்குகளாலும் வெற்றிபெற்றுள்ளார்கள். வெற்றிபெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்

எஸ். கதிரவேலு 182
கே. சதாசிவம் 180
எஸ். சண்முகரத்தினம் 51
ஏ. சின்னராசா 03
எஸ். முருகேசு 01

2-ம் வட்டாரம்

ஏ. செல்லத்துரை 237
கே. தில்லையம்பலம் 200
வி. நாகலிங்கம் 12
எஸ். சண்முகராசா 05

(6ம் பக்கம் பார்க்க)

தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை சீட்டிழுப்பு விபரம் வருமாறு:

முதலாவது பரிசு

01 C 0143 ரூபா 50,000

இரண்டாவது பரிசு

15 X 0228 ரூபா 14,000

மூன்றாவது பரிசு

07 T 0022 ரூபா 6,130

தலா ரூபா 200 பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

19	M 0983	13	C 0946
10	D 0922	17	N 0343
03	W 0586	01	H 0047
20	M 0002	01	M 0652
17	H 0573	06	L 0670
07	Q 0676	20	L 0763
02	E 0211	08	H 0162
19	B 0768	12	F 0304
14	W 0933	07	V 0763
13	M 0494	11	F 0286
19	W 0721	12	B 0963
14	H 0556	16	K 0929
10	V 0048	07	D 0817
11	L 0919	02	O 0143
10	A 0423	15	Z 0945
19	B 0603	14	J 0121
13	P 0677	01	Y 0016
13	M 0414	13	E 0216
07	E 0019	11	Q 0551
03	D 0320	18	Y 0118
13	C 0012	11	G 0703
16	Z 0495	02	J 0952
05	X 0479	11	M 0911
07	R 0317	02	X 0302
18	Z 0627	15	Q 0728
07	F 0628	07	N 0897
04	N 0598	11	Z 0101
18	T 0865	12	Q 0511
08	Z 0538	18	S 0605
16	M 0598	17	W 0408
04	W 0386	15	H 0957
08	O 0044	14	Y 0350
14	L 0376	06	O 0713
14	Y 0760	07	E 0952
01	S 0219	20	D 0077
20	M 0574	11	E 0230
18	O 0830	18	V 0088
06	E 0128	05	D 0634
14	C 0253	11	O 0611
03	U 0050	13	N 0264
09	U 0966	01	P 0651
06	C 0748	15	G 0288
07	W 0927	06	J 0081
09	A 0305	04	T 0165
07	P 0054	08	V 0808
03	J 0941	03	B 0999
20	E 0437	15	Z 0120
16	A 0626	19	J 0812
01	O 0567	07	Z 0026
01	P 0512	20	S 0089

மோசடியாக நிதி சேகரித்தவர்

18 மாதக் கடுங்காவல் பெற்றார்

யாழ்ப்பாணம், சனி நயினாதீவு அம்மன் கோயில் தண்ணீர்ப் பந்தலுக்காக நிதி திரட்டுவதற்கென போலிப் பற்றுச் சீட்டுப் புத்தகங்களுடனும் நயினை அம்மன் வீதியில் மடம் கட்ட நிதி கோரும் சிங்களத்தில் அச்சடிக்கப்பட்ட போலி வேண்டுகோள் 5000 பிரதிகளுடனும் கல்வியங்காட்டில் பணம் திரட்டும் பொழுது, யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் அகப்பட்ட புங்குடுதீவு வல்லிணைச் சேர்ந்த கதிரேசு வல்லிபுரம் என்பவர் சட்டவிரோதமாகப் பணந் திரட்டிய குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட்டினால் 18 மாதம் கடூழியச் சிறை விதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸின் துப்பறியும் இலாகாக் குற்றவியல் பகுதி சார்ஜன்ட் ஈஸ்வரபாதம், புங்குடுதீவு வல்லிணைச் சேர்ந்த கதிரேசு வல்லிபுரம் பொது மக்களை ஏமாற்றி கோயில் தேவைகளுக்கெனப் பணம் சேர்த்து தமது தேவைகளுக்கு அப்பணத்தை உபயோகித்ததாக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் டபிள்யு. அரசவாலிடன் முன்னிலையில் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார்.

நயினாதீவு அம்மன் கோயில் தர்மகர்த்தாக்களின் தலைவரான காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானமும் தர்மகர்த்தாக்களுள் ஒருவரான திரு. கிருஷ்ணபிள்ளையும் கொடுத்த தகவலின் பேரில் சார்ஜன்ட் ஈஸ்வரபாதம் கல்வியங்காட்டில் எதிரி பணந்திரட்டிக் கொண்டிருக்கும் பொழுது அவரை கைது செய்தாரென்றும், அந்நேரம் அவர்வசம் பற்றுச் சீட்டுப் புத்தகங்களும் மடங்கட்டப் பணங்கோரும் சிங்கள வேண்டுகோள் பத்திரங்களும் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவர் வசமிருந்த பற்றுச் சீட்டுகளின்படி இரண்டு மாதங்களுக்குள் ரூ. 1093,00 வரை சேர்த்திருந்தாரென்றும் அப்பணம் எதிரியின் சொந்தத் தேவைக்கே உபயோகிக்கப் பட்டதாகவும் கோர்ட்டில் தெரிவிக்கப் பட்டது.

எதிரி இதற்கு முன்பு மாத்தறையிலும் முல்கிரித்தியிலும் இருதடவைகளில் இதே விதமான குற்றத்திற்குள்ளானரென்றும் மாஜிஸ்டிரேட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மாஜிஸ்டிரேட் 18 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

நல்லூர். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

5-ம் வட்டாரம்: எஸ். கே. சபாபதி.

6-ம் வட்டாரம்: கே. எஸ். செல்லையா.

7-ம் வட்டாரம்: எஸ். கடராசா.

8-ம் வட்டாரம்: வி. வேலாயுதம்.

9-ம் வட்டாரம்: வி. கணபதிப்பிள்ளை.

10-ம் வட்டாரம்: வி. கிருஷ்ணபிள்ளை.

11-ம் வட்டாரம்: எம். சின்னத்துரை.

12-ம் வட்டாரம்: கே. வல்லிபுரம்.

இசைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி மாலை 5-30 க்கு வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் ரசிகரஞ்சனசபா இசைவிழா 2-ம் நாள் நிகழ்ச்சிகள்.

5-30—6-45 சங்கீதக்கல்லூரி மாணவர்கள் 11-பாட்டு, 6-45—6-00 செல்வி மங்கையற்கரசி கல்லதம்பி, செல்வி மகாலட்சுமி நல்லதம்பி - பாட்டு, 6-00—6-15 சங்கீதக்கல்லூரி மாணவர்கள் 111 - பாட்டு, 6-15—6 45 சங்கீதக்கல்லூரி மாணவரும் ஆசிரியரும் - வாத்தியக் கோஷ்டி, 6-45—7-15 செல்வி உ. சொக்கநாதலிங்கி - பாட்டு, 7-15—8-30 திரு. ஏ. நமசிவாயம் - பாட்டு, 8-30—8-45 தலைமையுரை - திரு. ஏ. பெருமை யினர் உதவி மாகாண அதிபர். 8-45—10-00 திரு. எஸ். கணபதிப்பிள்ளை - பாட்டு, 10-00—11-15 திருமதி சரஸ்வதி பாக்கியராசா - பாட்டு.

ஓடர் நிலை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 148-ம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம்பரமேஸ்வரனின் மரண சாசனம்எழுதப்படாத சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் அதே இல்லத்தைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி (சுப்பிரமணியம் பரமேஸ்வரனின் விதவை) மனுதார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 152-ம் இலக்கத்தைச் சேர்ந்த மைனர் (1). பரமேஸ்வரன் கலைச்செல்வன் (2). ஆறுமுகம் சண்முகராஜா ஆகியோர் பிரதிவாதிகள்.

இவ்வழக்கு 1964-ம் ஆண்டு பெப்ரவரி 3-ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி என். சிவஞானசுந்தரம் அவர்கள் முன்னிலையில், மனுதார் தரப்பு புரக்டர் திரு. எஸ். விஸ்வலிங்கம் அவர்கள் ஆஜராக விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது 1964 பெப்ரவரி 3-ம் திகதியிடப்பட்ட மனுதாரின் சத்தியக் கடதாசியும் வாசிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 2-வது பிரதிவாதி முதலாவது பிரதிவாதியின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது.

1964 ஏப்ரல் 24-ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேற்சொல்லப்பட்ட பிரதிவாதிகளோ அல்லது உரிமை கோரும் எந்த நபரோ நபர்களோ இந்நீதிமன்றத்திற் கேற்ற போதிய தடங்கல் காரணம் காட்டத் தவறினால் மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் விதவை என்ற கோதாவில் மனுதார், மேற்சொல்லப்பட்ட சொத்து கிர்வாகப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள உரிமையுடையவர் என்றும் அவருக்கே அப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் இத்தால் பிரகடனஞ்செய்யப்படுமாறு மேலும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திகதியில் (24-4-64) மனுதார் மைனரை நீதிமன்றத்துக்குக் கொண்டு வரவேண்டும் என மேலும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
என். சிவஞானசுந்தரம்,
மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

தயாரித்தவர்:-
(ஒப்பம்) எஸ். விஸ்வலிங்கம்
மனுதாரின் புரக்டர்,
(O. 30, 13&20)

நாவற்குழி கிராமசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளுக்கு 'சீல்' வைத்த கேள்விப்பத்திரங்கள் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அந்தந்த வேலைகளுக்கு நேரே காட்டப்பட்டுள்ள விகிதம்படி கந்தோரில் பணம்கட்டி 28-4-64-ம் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரருக்கு மாத்திரம் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். வேண்டிய விபரங்களை வேலைநேரங்களில் கிராமசபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகள்

1. கோயிலாக்கண்டி குச்சப்பிட்டி கடலோரம் கட்டுப் பணம் ரூபா 100-00.
2. கோயிலாக்கண்டி வேலம் பராய்க்கினறு ரூபா 10-00.
3. கோயிலாக்கண்டி பிணமுருங்கைச் சுடலைமடம் ரூபா 10-00.

வே. சிவசுப்பிரமணியம்
தலைவர்
நாவற்குழி கிராமசபை

நாவற்குழி கிராமசபை அலுவலகம்,
தச்சன்தோப்பு,
கைதடி, 17-4-64. 329

நல்ல நிலை

செல்லப்பாபிள்ளை:

காலஞ் சென்ற திரு. கே. செல்லப்பாபிள்ளையின் மூத்த பத்தினர், அவரின் இறுதிச்சடங்குக்கு சமூகமளித்தவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், மற்றும் சகல உதவி புரிந்தவர்களுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

தங்கோடை,
243 காரைநகர்

ரீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.
AUDIE MURPHY
JOHN SAXON
IN
POSSE FROM HELL
EASTMAN COLOUR

3வது மகத்தான புகழ் வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)
மொடோனா (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) கல்யாணி (நாவலபிட்டி)

எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா—டி. ஆர். ராஜகுமாரி
மற்றும் பலர் நடித்த
பெரிய இடத்துப் பெண்

இப்பத்திரிகை சுடரொளி பிறிண்டேர்ஸ் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.